**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.301/2017**

Date: 18.10.2023.

PW-2 சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1 and A2 Present.**

**1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

2016ம் ஆண்டில் நான் செல்போன் வைத்திருந்தேன். அந்த போன் மூலமாக நான் போலீசாரை அழைத்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் செல்வதற்கு 1 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு போலீசார் தகவல் கேள்விப்பட்டு வந்தார்களா அல்லது யாராவது சென்று அழைத்ததின் பேரில் வந்தார்களா என்ற எனக்கு தெரியாது.

2016ம் ஆண்டில் நான் கூலி செய்தேன். எனக்கு எழுதப் படிக்க தெரியும். நான் 12ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனக்கு 2014ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. நான் தனியாக வசிக்கிறேன். அ.சா.1டன் நான் வசிக்கவில்லை . நான் மாரமங்கலம் குடியிருப்பு பகுதியில் வசிக்கிறேன். மாரமங்கலம் குடியிருப்பு பகுதியில் இருந்து ஒரு பஞ்சாயத்து மண் ரோடானது 1ம் எதிரியின் வீடு வரை சென்று முடிகிறது என்றால் சரிதான். 22.08.2016 அன்று நான் கூலி வேலைக்கு போயிருந்தேன் என்றால் சரியல்ல.

எனக்கு ஒரு குழுந்தை. அந்த மண் ரோட்டிற்கு கிழக்கு பக்கம் என் மாமனாரின் கொல்லப்பட்டறை இருக்கிறது என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று மேற்படி கொல்லப்பட்டறை திறக்கப்படவில்லை. சம்பவத்தன்று என் மாமனார் வெள்ளை வேட்டியும் வெள்ளை சட்டையும் அணிந்திருந்தார். என் மாமனார் வீட்டிலிருந்து மேடு ஏறி 1ம் எதிரியின் வீட்டிற்கு போக வேண்டும் என்றால் சரிதான். அன்றைய தினம் கொல்லப்பட்டறை மூடப்பட்டிருந்ததால் நாங்கள் அனைவரும வீட்டில் இருந்தோம் என்றால் சரிதான். என் மாமியாரும் வீட்டில்தான் இருந்தார்.

மேற்படி மண் ரோட்டில் இருந்து சுமார் 40 அடி தொலையில் என் மாமனார் வீடு இருக்கிறது. அன்றைய தினம் என் மாமனார் ஏற்காடு போய்விட்டு வந்தார். சம்பவம் மேட்டில் 1ம் எதிரியின் வீட்டின் முன்பாக நடந்தது என்றால் சரிதான். துப்பாக்கி சத்தம் கேட்டவுடன் அக்கம் பக்கத்தினர் வந்து விட்டார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் 4 பேர் மட்டும்தான் இருந்தோம். 1ம் எதிரியின் வீட்டில் அவரது மனைவி இருந்தார்.

1ம் எதிரியும் அவரது மனைவியும் அந்த வீட்டில்தான் ஒன்றாக வசிக்கிறார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததற்கு பிறகு அக்கம் பக்கத்தினர் வந்தார்களா என்றால் நான் சம்பவம் தொடர்பாக என் சின்ன மாமனாருக்கு தகவல் சொல்லி அவர் வந்ததற்கு பிறகுதான் மற்றவர்கள் வந்தார்கள். ஏற்காட்டிலிருந்து திரும்பிய என் மாமனார் நேராக மேட்டில் உள்ள 1ம் எதிரியின் வீட்டிற்கு சென்றார் என்றால் சரியல்ல. எங்களது வீட்டிற்குதான் வந்தார்.

ஏற்காட்டிலிருந்து திரும்பிய என் மாமனார் நேராக எங்களது வீட்டிற்கு வந்தார் என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. எனது மாமனார் வீட்டிலிருந்து 1ம் எதிரியின் வீட்டிற்கு போவதற்கு மேற்படி மண் ரோட்டின் வழியாகத்தான் போக வேண்டும். போலீசார் பிரேதத்தை கைப்பற்றிய போது பிரேதம் கொல்லப்பட்டறையின் அருகில் இருந்ததா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடத்தில்தான் இருந்தது.

சம்பவம் நடந்த போது நாங்கள் அனைவரும் கீழே இருந்தோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்து சுமார் 1 மணி நேரம் கழித்துதான் அக்கம் பக்கத்தினர் அந்த இடத்திற்கு வந்தார்கள். 1ம் எதிரி துப்பாக்கியை சம்பவ இடத்திலேயே போட்டுவிட்டு போய் விட்டதாக நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. என் மாமனார் என்ன காரணத்தினால் 1ம் எதிரியின் வீட்டருகே சென்றார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

என்ன காரணத்தினால் என் மாமனார் 1ம் எதிரியின் வீட்டருகே சென்றார் என்றால் 1ம் எதிரி என் மாமனாரை கெட்ட வார்த்தைகளால் திட்டியதன் காரணமாக சென்றார். மேட்டுப் பகுதியில் துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்பதற்கு முன்பாகவே வாய் தகராறு ஆரம்பித்துவிட்டது. என் மாமனாருக்கும், 1ம் எதிரிக்கும் தள்ளுமுள்ளு

ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

அப்போது நான், அ.சா.1 ஆகியோர் 1ம் எதிரியின் மனைவி ராமாயியுடன் வாய் தகராறு செய்து கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. நான் சத்தம் கேட்டுத்தான் மேட்டுபகுதியை பார்த்தேன் என்றால் சரிதான். புகார் கொடுக்கப்பட்டதற்கு பிறகு போலீசார் எங்களது கொல்லபப்பட்டறைக்குள் வந்து பார்த்தார்களா என்றால் இல்லை. துப்பாக்கி சத்தம் கேட்டு, அதன் பின்னர் 1ம எதிரி அங்கிருந்து போனதற்கு பிறகு நாங்கள் எனது மாமனாரின் அருகில் சென்று பார்த்தோம். அவர் ஜட்டியுடன் கீழே கிடந்தார் என்றால் சரிதான்.

என் மாமனார் 1ம் எதிரியின் வீட்டருகே போகாமல் இருந்திருந்தால் சம்பவத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. ஏன் என்றால் 1ம் எதிரி கெட்ட வார்த்தையால் பேசாமல் இருந்திருந்தால் என் மாமனார் அங்கு போயிருக்க மாட்டார் என்ற சாட்சி சுயமாக சொல்கிறார். வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியானது என் மாமனாரின் கொல்லபப்பட்டறையில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அன்றைய தினம் நடந்த சம்பவத்திற்கு முழு காரணம் என் மாமனார்தான் என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்த தினத்தன்று என் மாமனாரின் செயலின் காரணமாகத்தான் துப்பாக்கி வெடித்தது என்றால் சரியல்ல. 1ம் எதிரி அவரை தற்காத்து கொள்வதற்காகத்தான் அன்று செயல்பட்டார் என்றால் சரியல்ல. எங்களது கொல்லபப்பட்டறையில் சட்ட விரோதமாக துப்பாக்கி தயார் செய்யப்பட்டதை மறைப்பதற்காகத்தான் 1ம் எதிரி துப்பாக்கியை பயன்படுத்தியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அதனால்தான் மற்றொரு கொல்லபப்பட்டறையின் உரிமையாளரான 2ம் எதிரியை வழக்கில் பொய்யாக சேர்த்திருக்கிறோம் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் 1ம் எதிரி என் மாமனாரை துப்பாக்கி கட்டையால் தலை, முகம் மற்றும் கை ஆகிய இடங்களில் தாக்கவில்லை என்றால் சரியல்ல. பக்கத்தில் வந்தால் சுட்டுவிடுவேன் 1ம் எதிரி எங்களை மிரட்டியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- **G. Sri Rama Jeyam**
III Additional District Judge,
Salem.